Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2011-2012

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Mar. 12 : 546 Nos.
  - Up to Feb. 12 : 528 Nos.
- **Performance Feb. 12 ...**
  - Turnover growth : 36.22%
  - Employment growth : - 0.54%
  - 100% Attendance : 18.28%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSC Pattern School)

## ACHIEVEMENT




## பானம்!!

பார்ட்டிக்குப் போய்விட்டு குடிக்காவிட்டால் நண்பர்களை இழந்து விடுவேனோ என நட்புக்காக குடித்து, சண்டைக்காரனாகி விட்டேன்.

குடிக்கத் தெரியாதவன் என யாரும் என்னை இளப்பமாக கூறி விடக்கூடாது என பந்தாவுக்காக குடித்தேன். குடி என் பொருளாதார நிலையை பந்தாடிக் கொண்டிருக்கிறது.

சந்தோஷத்திற்காக குடித்துவிட்டு சந்தோஷத்தை இழந்தேன் தைரியத்துக்காகவும், நம்பிக்கைக்காகவும் குடித்துவிட்டு பயப்படுகிற கோழையாக மாறி, நம்பிக்கையை இழந்து போனேன்.

ரிலாக்ஸ் பண்ணுவதற்காக குடித்தேன். ஆனால் உடல் நடுங்க ஆரம்பித்ததால் டென்ஷனோடு நடமாடிக் கொண்டிருக்கிறேன் கவலையை மறக்க குடித்தேன். ஆனால் உடல் நடுங்க ஆரம்பித்ததால் டென்ஷனோடு நடமாடிக் கொண்டிருக்கிறேன்.

கவலையை மறக்க குடித்தேன். ஆனால் குடிக்க வேண்டுமென்ற நினைவை மறக்கிற வழி தேடி, இப்போது ஓடிக்கொண்டிருக்கிறேன். முதன் முதலில் தூக்கத்துக்காக குடித்தேன். பின்பு குடிக்கு அடிமையாகி, எவ்வளவு குடித்தாலும் தூக்கமின்றி தவிக்கிறேன்.

உடல் வலிமையடையும் என சிலர் கூறிய பொய்யை நம்பி குடிக்கத் துவங்கி, இப்போது பலவீனமாக மாறிப்போனேன். வலியைத் தாங்கும்படி குடிக்க ஆரம்பித்தேன். மதுபானத்தினால் வந்த வியாதியின் விளைவால், உடலின் பல இடங்களில் வலி வந்து என்னை வருந்தச் செய்கிறது.

பிரச்சனைகளை மாற்றுவதற்காக குடித்தேன். பிரச்சினைகளோ பெருகி என்னை பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. சுதந்தரமாய் இருப்பதற்காக குடிக்கத் துவங்கி, இப்போது குடிக்கு அடிமையாகிப் போய் மீள முடியாமல் தவிக்கிறேன்.

என்னுடன் குடிக்கும் நண்பர் வட்டாரம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது, என் வருமானமோ நாளுக்குநாள் குறுகி வருகிறது. என் குடும்பமோ நாளுக்கு நாள் சிதறுண்டு போகிறது.

ஜாலியாக வாழும்படி குடித்தேன். மரணத்தை வரவழைத்து கொண்டேன்.

தங்களுடைய துக்கத்தை குடியில் மூழ்கடிக்க வேண்டும் என்பதற்காக குடிக்கிறவர்கள் அறியவேண்டிய உண்மை ஒன்று உண்டு. அது என்ன தெரியுமா? துக்கத்திற்கு நீந்த தெரியும் என்பதே அது.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

## மாறுதல்

நீங்கள் யார் என்பதை எந்த மாற்றங்களுக்கும்
முயற்சிக்காமல் புரிந்து கொள்ள ஆரம்பித்தீர்கள் என்றால்,
அப்பொழுது உங்களில் ஒரு மாறுதல் ஏற்படுகிறது.

Compiled by : Mr. G. Balachandran
Research & Development

## FUNCTIONAL WISHES



**May Day**
**1st May**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital Tel:22294565 M/s. Jeya Clinic, Tel: 98408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | | |
|---|---|---|
| **Mr. T. Stephen** | - Production | 2nd May |
| **Mr. V. Arun Kumar** | - Project | 3rd May |
| **Mr. Y. Merlin Ebby** | - Production | 3rd May |
| **Mr. M. Jagatheesh** | - Production | 4th May |
| **Mr. M. Venkatraman** | - Production | 4th May |
| **Mrs. C. Bavani** | - Admin | 4th May |
| **Mr. S. Dhilip Kumar** | - Production | 5th May |
| **Mr. D. Raj kumar** | - Production | 5th May |
| **Mr. K. Sethuraman** | - FRP Prod. | 8th May |
| **Mr. D.S. Anish** | - Facilitation | 10th May |
| **Mr. S. Chinnathangam** | - Coating | 10th May |
| **Mr. T. Raja Singh** | - Marketing | 10th May |
| **Mr. S. Lingathurai** | - Aquafil | 13th May |
| **Mr. L. Marimuthu** | - FR Prod. | 15th May |
| **Mr. M. Raj Kumar** | - Coating | 16th May |
| **Mr. S. Lawrence** | - Production | 20th May |
| **Mr. P. Porselvan** | - Utilities | 20th May |
| **Mr. K. Saravanan** | - Production | 20th May |
| **Mr. T. Amaladhas** | - Out Sourcing | 21st May |
| **Mr. T. Dinesh** | - Production | 21st May |
| **Miss. L. Menaka** | - Facilitation | 25th May |
| **Mr. P. Karnan** | - Production | 25th May |
| **Mr. P. Jeyalekshmi** | - Design | 25th May |
| **Mr. N. Murugan** | - Project | 26th May |
| **Mrs. S. Yagavalli** | - Admin | 30th May |
| **Mr. M. Ramesh** | - Production | 31st May |

**Best Wishes from Tiaano Employees**

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

ஒரு பூச்சி அங்குமிங்கும் அலைந்து யானையின் மேல் உட்கார்ந்தது. யானை கேட்டது. “இவ்வளவு பலவீனமாய் இருக்கிறாய். ஏன் அலைகிறாய் ஓரிடத்தில் உட்காரேன்”. பூச்சி சொன்னது. “எதையாவது நுகர்ந்தால் உடனே அந்தப் பக்கம் இழுக்கப்படுகிறேன். அமைதி இழக்கிறேன். அது சரி நீ எப்படி அமைதியாய் இருக்கிறாய்?”

யானை சொன்னது, “என் புலன்கள் என்னைக் கட்டுப்படுத்துவதில்லை. எதைச் செய்தாலும் ஆழ்ந்து செய்கிறேன். சாப்பிடும்போது, நிற்கும் போது, நடக்கும் போது அதை மட்டுமே செய்கிறேன். அமைதியாய் இருக்கிறேன். எனவே, வலிமையாய் இருக்கிறேன்”. அமைதியே வலிமை என்பது அந்தப் பூச்சிக்குப் புரிந்தது.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### World’s Smallest Petrol Engine…



Scientists have created the smallest petrol engine in the world (less than a centimeter long not even half an inch),small enough to power a watch or any small gadget. The mini-motor which runs for two years on a single squirt of lighter fuel is set to revolutionize technology associated with it. It generates 700 times more energy than a conventional battery. It could be used to operate laptops and mobile phones for months doing away with the need for charging.

Experts believe it could be phasing out batteries in such items within just six years. The engine, minute enough to be balanced on a fingertip, has been produced by engineers at the University of Birmingham. At present, charging an ordinary battery to deliver one unit of energy involves putting 2,000 units into it. The little engine, because energy is produced locally, is far more effective.

Compiled by : Mr. M. Siva Kumar
Marketing

### SEVEN BRILLIANT QUOTES



**Shakespear**

Never play with the feelings of others,
because you may win the game but the risk is
that you will surely lose the person for a life time.



**Napoleon**

The world suffers a lot,
Not because of the violence of bad people.
But because of the silence of good people.



**Einstein**

I am thankful to all those who said NO to me
It’s because of them I did it myself.



**Abraham Lincoln**

If friendship is your weakest point
then you are the strongest person in the world.



**Martin Luther King**

We must learn to live together as brothers
or we will perish together as fools.



**Mahatma Gandhiji**

The weak can never forgive.
Forgiveness is the attribute of the strong.



**Dr. Abdul Kalaam**

It is very easy to defeat someone,
but it is very hard to win someone.

Compiled by : Mr. C. Abilash
Facilitation

## தெரிந்து கொள்வோம்

தமிழ் நாட்டில் பண்டைய தமிழர்களின் வரலாற்றுச் சான்றாக பத்து அரண்மனைகள் உள்ளன. அவை,

1. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை
2. திருச்சி மங்கம்மாள் அரண்மனை
3. தஞ்சாவூர் சரபோஜி அரண்மனை
4. புதுக்கோட்டை அரண்மனை
5. சென்னை சேப்பாக்கம் அரண்மனை
6. சிவகங்கை அரண்மனை
7. எட்டயபுரம் அரண்மனை
8. இராமநாதபுரம் அரண்மனை
9. பத்மனாபபுரம் அரண்மனை
10. மதுரை அரசி மங்கம்மாள் அரண்மனை

Compiled by : Miss. C. Ramya Devi
D/o. Mr. S. Chinnathangam – Coating

### ஆரோக்கிய வாழ்வுக்கு 10 கட்டளைகள்

1. உடற்பயிற்சி, தியானம் செய்யுங்கள்
2. மிதமாக உண்ணுங்கள்
3. சைவ உணவு உண்ணுங்கள்
4. நீர் அருந்துவதை சீராக்குங்கள்
5. உறங்குவதற்கு 3 மணி நேரம் முன் உணவருந்துங்கள்
6. உங்கள் சொற்களைக் கவனியுங்கள்
7. அன்பை வெளிப்படுத்துங்கள்
8. நன்றியுடன் வாழுங்கள்
9. உங்கள் மன அழுத்தத்தைச் சீராக்குங்கள்
10. பூமித்தாயை அரவணையுங்கள்.

Compiled by : Mr. D.S. Anish
System Admin

### Five Golden Rules for Saving Energy

- Keep AC at 26°C or more.
- Use CFLs over incandescent bulbs to save energy.
- Use BEE 5-star rated electrical appliances.
- Lower the use of electric cooling and heating appliances.
- Switch off all Electrical Appliances from the plug point, when not in use.

Collected in : Power Line Magazine

### குருவிற்கு திருடனும் சீடனே!

ஒரு ஜென் குருவிடம் பல சீடர்கள் இருந்தனர். அவர்கள் தங்கள் பொருட்கள் அடிக்கடி திருடு போவதை அறிந்து தங்களுக்குள் யாரோ திருடுகிறார்கள் என்று தெரிந்து, ஒரு நாள் திருடிய சீடனைக் கையும் களவுமாகப் பிடித்து குருவின் முன் நிறுத்தினார்கள். குரு அமைதியாக இருந்ததைப் பார்த்து அவரிடம் அந்த சீடனை வெளியே அனுப்பக் கோரினர். குரு சிறிது நேரம் ஒன்றும் சொல்லாமல் இருந்துவிட்டுப் பின்னர் அவனை வெளியே அனுப்ப முடியாதெனத் திட்டவட்டமாகக் கூறினார். கோபமுற்ற சீடர்கள் அவனை வெளியே அனுப்பாவிட்டால் தாங்கள் அனைவரும் வெளியேறி விடுவோம் என்று கூறினார்.

குரு அவர்களைப் பார்த்து அமைதியாகச் சொன்னார், “நீங்கள் அனைவரும் வெளியே போவதாக இருந்தாலும் நான் அவனை வெளியே அனுப்ப முடியாது. “சீடர்கள் குரு தவறு செய்தவனுக்கு ஏன் அவ்வளவு பாதுகாப்புக் கொடுக்கிறார்” என்று புரியாமல் விழித்தனர். குரு மீண்டும் அவர்களிடம் பேசினார், “உங்கள் அனைவருக்கும் உலகில் நல்லது எது, கெட்டது எது என்பது நன்றாகத் தெரிகிறது எனவே நீங்கள் வெளியே சென்றாலும் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால் இவனுக்கு சரியான செயல் எது. தவறான செயல் எது என்பது இன்னும் தெரியவில்லை. இவனுக்கு நான் உதவாவிட்டால் வேறு யார் உதவுவார்கள்? அவனுக்கு நல்லது எது, கெட்டது எது என்று நான் தான் சொல்லித்தர வேண்டும். எனவே அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்” என்றார். சீடர்கள் கண்களில் கண்ணீர் வழிய குருவிடம் மன்னிப்புக் கேட்டனர்.

Compiled by : Mr. Shahul Hameed Bava
Facilitation

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி X)

### ஒழுங்கு

மேற்சொன்ன விஷயங்கள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி, மீண்டும் இதே மேஜைமீது அடுக்கி வைப்பதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. அவற்றில் சிலவற்றையாவது, தலையைச் சுற்றி வீசி எறிந்தாக வேண்டும். இல்லாவிட்டால், வேறு இடங்களில் பத்திரப்படுத்தியாக வேண்டும். இல்லாவிட்டால், இந்த மேஜைக்கு விமோர்ச்சனமே கிடையாது.

ஆக, இப்போது நாம் தயாரித்திருக்கும் பட்டியலை மூன்றாக உடைக்க வேண்டும். மேஜை மீது வைக்கத் தகுதியான, வைக்க வேண்டிய அத்தியாவசியப் பொருள்கள். அவசியமான, ஆனால், இங்கே மேஜை மீது தேவைப்படாத பொருள்கள்.

இந்தப் புரிதலின் அடிப்படையில், நாம் சில முக்கியமான முடிவுகளுக்கு வருகிறோம்:

- சென்ற நூற்றாண்டு நாளிதழ்கள், வார இதழ்களுக்கெல்லாம் எழுத்து மேஜையின் மீது என்ன வேலை?
- கிழித்த குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் அல்லவா எறிய வேண்டும்?
- பல் குத்திய அல்லது குத்தவேண்டிய குச்சிகள், உடைந்த பொம்மைக்கும் அதே கதிதான்.
- காபி டம்ளரைத் தூக்கி எறியமுடியாது, கழுவிச் சமையலறையில் வைக்கலாம்.
- மோபைல் ஃபோன் பில்லை, பத்திரமாக ஒரு ஃபைலில் கோர்த்து வைக்கலாம்.
- சாக்ஸை அதற்கான இயந்திரத்தினுள் துவைக்கப் போடலாம்.
- பிறந்த நாள் வாழ்த்தில் அழகாக ஒரு பூனைப் படம் இருக்கிறது. அதைக் கத்தரித்து சுவரில் ஒட்டி வைக்கலாம்.

## கவிதைகள்

### இன்றே விதைத்திடு

நாளை என்ற ஒரு நாளைப் படைத்து
அந்த நாளுக்காகத் தினமும் கவலைப்பட்டு...
இன்று நடக்காத ஒன்றைக் கனவுகள் என்ற
முடிச்சில் பின்னி நாளை என்ற தூண்டிலில்
மாட்டி நடக்கக் காத்திருக்கிறோம்...!
விதைகள், நாளை தான் முளைக்கும்
ஆனால், விதைகள் இன்று போடாமல் போனால்
அது முளைக்காது...!
நாளை என்ற ஒரு நாள் நாளையாகவேதான்
இருக்கும்...! நினைவில் வை
முயற்சிகளை இன்றே எடு
அத்தனையும் இன்றே நிறைவேறும்...!

Compiled by : Mrs. G. Kalai Vani
Facilitation

## Colour



When I born, I black;
When I grow up I black;
When I go in sun I black;
When I scared, I black;
When I sick, I black;
And when I die, I still black;
And U White fellows;
When U born, U pink;
When U grow up, U white;
When U go in sun, U red;
When U cold, U blue;
When U scared, U yellow;
When U sick, U green;
When U die, U grey;
And U call me coloured.

(This Poem, written by an African child was nominated for the Best Poem of 2005.)

Collected by : Mrs. M. Shahin
Marketing

### அறிவிப்பு

→ நமது நிறுவனம் குட்டீஸ்.com என்ற புதிய இணையதளத்தை நமது குழந்தைகளுக்காக உருவாக்கி உள்ளது. எனவே அனைவரும் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கைக் குறிப்பு போன்ற விவரங்களை (www.tianode.com/kutties) என்ற இணைய முகவரியில் பதிவுசெய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

→ நடைபெறவிருக்கும் 10வது(2012) அலுவலர் தினவிழாவின் குழந்தைகள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் குழந்தைகளின் பெற்றோர்கள் தத்தம் பெயர்களை திருமதி. ஷாஹின் மணிகண்டன் (kutties@tianode.com) அவர்களிடம் பதிவு செய்து கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு.** நிரந்தர பணியாளர்களின் குழந்தைகள் மட்டும் கலைநிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

**இப்படிக்கு**
**விழாக்குழு**

ஆச்சா. இப்படி ஒவ்வொன்றாகப் பல விஷயங்களைக் கழித்துக் கட்டியபிறகு அல்லது ஒழுங்குபடுத்திய பிறகு, மிச்சமிருப்பவை சில புத்தகங்களும் குறிப்பேடுகளும்தான், இல்லையா?

உண்மையில், ஓர் எழுத்து மேஜையின் மீது இருக்கவேண்டிய அவசியமான பொருள்கள் இவைதானே? இந்த அடிப்படை உண்மையை மறந்த காரணத்தினால்தானே அப்படி குப்பைக் கூடையை நிமிர்த்தி வைத்தாற்போல் மேஜையை அசிங்கப்படுத்திக் கொண்டிருந்தோம்?

போகட்டும்! குற்றவுணர்ச்சியைக் கொஞ்சம் தள்ளிப்போட்டு விட்டு, அடுத்து ஆகவேண்டியதை யோசிப்போம்.

அடுத்து ஆக வேண்டியதா? மேஜைதான் சுத்தமாகிவிட்டதே! இனிமேல் என்ன? அது சரி, சில மாதங்களுக்கு முன்பு இதேபோல் சுத்தமாக, அழகாக இருந்த மேஜைதானே இது! முன்பு அதை தான் எப்படிக் குப்பையாக்கி நாசப்படுத்தினேனோ, அதேமாதிரி மீண்டும் ஒரு முறை செய்யமாட்டேன் என்று என்ன உத்திரவாதம்? அதாவது, குப்பையைச் சுத்தப்படுத்தி ஒழுங்காக்குவது முக்கியம்தான். ஆனால் அதைவிட முக்கியம், சுத்தம் செய்த இடத்தில் மீண்டும் குப்பை சேராதபடி பார்த்துக்கொள்வது.

இதற்கு நாம் என்ன செய்யலாம்? முதல்வேலையாக, மேஜைமீது அப்படியே விழுந்து கிடக்கிற புத்தகங்களையும் குறிப்பேடுகளையும் ஒழுங்காகப் பிரித்து அடுக்கி வைக்கலாம். அடுத்து, குறிப்பேடு இருந்தால் மட்டும் போதுமா? அதில் எழுதுவதற்கு ஏதாவது வேண்டாமா? ஒரு பேனாவையோ, பென்சிலையோ தேடிக் கண்டுபிடித்து மேஜைமீது வைக்கலாம்.

பேனா, பென்சில் ஆச்சு, அவற்றை அப்படியே மேஜைமேல் வைத்தால் எங்கேயாவது உருண்டு விழுந்துவிடும், புத்தக இடுக்குகளில் விழுந்துவிடும். அவசரமாகத் தேடுகிற நேரத்தில் கைக்குக் கிடைக்காது. ஆகவே, ஒரு பிளாஸ்டிக் டம்ளர் அல்லது பழைய பெருங்காய டப்பாவை மேஜைமேல் வைத்து, அதில் பேனா, பென்சிலைப் போட்டுவைக்கலாம்.

தொடரும்...

## REVIEW MEETING & CONFERENCE HALL INAUGURATION

